# பத்தாம் வகுப்பு - தமிழ் ( புதிய பாடத்திட்டம்)

## இயல் -1 சிந்தனை வினாக்கள்

**பலவுள் தெரிக.**

1) சாகும்போதும் தமிழ்படித்துச் சாகவேண்டும் - என்று பாடியவர்
அ) பாரதிதாசன் ஆ) பாரதியார் இ) சச்சிதானந்தன்
2) கீழ்வருவனவற்றுள் பெருஞ்சித்திரனார் எழுதாத நூல் எது ?
அ) நூறாசிரியம் ஆ) தென்தமிழ் இ) மகபுகுவஞ்சி
3) தமிழுக்குக் கருவூலமாய் அமைந்த பெருஞ்சித்திரனாரின் நூல்
அ) பாவியக்கொத்து ஆ) கனிச்சாறு இ) திருக்குறள் மெய்ப்பொருளுரை
4) பெருஞ்சித்திரனாரின் இயற்பெயர்
அ) துரை.முருகன் ஆ) துரை.மாணிக்கம் இ) துரை. முத்து
5) தென்னன் மகளே - இத்தொடரில் உள்ள தென்னன் யாரைக் குறிக்கிறது ?
அ) சேரன் ஆ) சோழன் இ) பாண்டியன்
6) பெருஞ்சித்திரனார் தமிழுணர்வை உலகெங்கும் பரப்ப காரணமாக இருந்த இதழ்
அ) தமிழ்ச்சிட்டு ஆ) தென்தமிழ் இ) தமிழ்மொழி
7) கூற்று1: பெருஞ்சித்திரனார் நூல்கள் நாட்டுடைமையாக்கப்படவுள்ளன.
கூற்று 2: பெருஞ்சித்திரனார் எழுதியநூல்களுள் ஒன்று உலகியல் நூறு.
அ) கூற்று1 சரி 2 தவறு ஆ) கூற்று1 தவறு2 சரி இ) கூற்று 1,2 சரி.
8) பொருந்தாததைத் தேர்ந்தெடுக்க.
அ) எண்சுவை எண்பது ஆ) உலகியல் நூறு இ) பாவியம் ஐம்பது
9) தமிழழகனாரின் இயற்பெயர்
அ) மாணிக்கம் ஆ) கல்யாணசுந்தரம் இ) சண்முகசுந்தரம்
10) தமிழழகனார் படைத்த சிற்றிலக்கிய நூல்களின் எண்ணிக்கை
அ) 12 ஆ) 14 இ) 16
11) மெத்த வணிகலமும் மேவலால் - இதில் மேவலால் என்ற சொல்லின் பொருள்
அ) தருதல் ஆ) பெருதல் இ) பெறுதல்
12) தமிழழகனாரின் பெற்ற சிறப்புப்பெயர்
அ) சண்முகசுந்தரம் ஆ) சந்தக்கவிமணி இ) பாவலரேறு
13) நாடும் மொழியும் நமதிரு கண்கள் - என்று பாடியவர்
அ) பெருஞ்சித்திரனார் ஆ) பாரதியார் இ) தமிழழகனார்
14) இரா.இளங்குமரனார் பற்றிய கூற்றுகளுள் தவறானது எது ?
அ) பாவாணர் நூலகம் உருவாக்கியவர்
ஆ) நூலாக்கப் பணிகளை விரும்பிச் செய்பவர்
இ) தென்தமிழ் வாயிலாகத் தமிழுணர்வை பரப்பியவர்
15) உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு
அ) இந்தியா ஆ) சிங்கப்பூர் இ) மலேசியா

16) திருவள்ளுவர் தவச்சாலை அமைந்துள்ள ஊர்

அ) அல்லூர் ஆ) திருச்சிராப்பள்ளி இ) முறப்பநாடு

17) சொல்லாராய்ச்சியில் பாவாணரும் வியந்த பெருமகனார்

அ) பெருஞ்சித்திரனார் ஆ) இளங்குமரனார் இ) தமிழழகனார்

18) கீழ்க்கண்ட கூற்றுக்களை ஆராய்க.

கூற்று1: இளங்குமரனார் தமிழ்வழித் திருமணங்களை நடத்தி வருபவர்

கூற்று 2: இளங்குமரனார் இமைகளை மூடியபடி எழுதும் ஆற்றல் கொண்டவர்.

அ) கூற்று 1 தவறு 2 சரி ஆ) கூற்று 1 சரி 2 தவறு இ) கூற்று 1,2 சரி.

19) ஒரு தாவரத்தின் அடிப்பகுதியைக் குறிப்பதற்கான சொற்கள்

அ) கவை,கொம்பு ஆ) கோல்,தூறு இ) இணுக்கு,கழி

20) பொருந்தாத இணையைக் கண்டறிக.

அ) போது - பூ விரியத் தொடங்கும் நிலை ஆ) அரும்பு - பூவின் தோற்றம்

இ) செம்மல் - மரஞ்செடியினின்றும் பூ கீழேவிழுந்த நிலை.

21) சோளம், கரும்பு முதலியவற்றின் இலை

அ) தாள் ஆ) சண்டு இ) தோகை

22) பொருத்துக.

1) புளி, வேம்பு - அ) தளிர்

2) நெல், புல் - ஆ) குருத்து

3) தென்னை, பனை - இ) கொழுந்தாடை

4) கரும்பு - ஈ) முறி

அ) 1-ஈ,2- அ, 3- ஆ,4- இ ஆ) 1-இ, 2-அ,3-ஆ, 4-ஈ இ) 1-ஆ, 2-அ,3- ஈ, 4-இ

23) மா, புளி, வாழை முதலியவற்றின் இளநிலை

அ) குருத்து ஆ) கன்று இ) நாற்று

24) பொருந்தாத இணையைத் தேர்ந்தெடுக்க

அ) வெம்பல் - சூட்டினால் பழுத்த பிஞ்சு ஆ) சொத்தை- பூச்சி அறிந்த காய்

இ) சிவியல் - நுனியில் சுருங்கிய காய்

25) பழங்களின் மேற்பகுதியினைக் குறிக்க வழங்கும் சொற்களில் சரியானது

அ) தோல் - மிக மெல்லியது ஆ) தொலி - திண்ணமானது இ) ஓடு - மிக வன்மையானது.

26) பச்சை நிழல் என்ற நூலின் ஆசிரியர்

அ) நன்னன் ஆ) சேதுமணி இ) உதயசங்கர்

27) நாம் ஏன் தமிழ் காக்க வேண்டும் என்ற புத்தகத்தின் ஆசிரியர்

அ) சேதுமணி மணியன் ஆ) நன்னன் இ) உதயசங்கர்

28) புதிய உரைநடை என்ற நூலின் ஆசிரியர்

அ) பெருஞ்சித்திரனார் ஆ) தமிழழகனார் இ) எழில்முதல்வன்

29) மா.இராமலிங்கம் அவர்களின் சாகித்திய அகாதெமி விருது பெற்ற நூல்

அ) இனிக்கும் நினைவுகள் ஆ) யாதுமாகி நின்றாய் இ) புதிய

உரைநடை

30) மழையும் புயலும் - என்ற நூலின் ஆசிரியர்

அ) மா.இராமலிங்கம் ஆ) வ.ராமசாமி இ) நா.பார்த்தசாரதி

31) உலகத் தமிழ்க் கழகத்தை நிறுவி அதன் தலைவராகவும் இருந்தவர்

அ) இளங்குமரனார் ஆ) பெருஞ்சித்திரனார் இ) தேவநேயப் பாவாணர்.

விடைகள்:

1) இ. 16) அ
2) ஆ. 17) ஆ
18) இ
3) இ. 19) ஆ

4) ஆ. 20) இ.
5) இ. 21) இ
6) அ. 22) அ
7) ஆ. 23) ஆ
8) இ. 24) இ
9) இ. 25) இ
10) அ. 26) இ
11) இ. 27) அ
12) ஆ. 28) இ
13) ஆ. 29) இ
14) இ. 30) ஆ
15) இ. 31) இ

**குறுவினாக்கள் :**

1) பெருஞ்சித்திரனார் தமிழுணர்வை உலகெங்கும் பரப்பத் துணைநின்ற இதழ்கள் யாவை ?
2) பெருஞ்சித்திரனார் படைத்த நூல்கள் யாவை ?
3) இன்னறும் பாப்பத்தே- இதில் குறிக்கப்பெறும் நூல்களைக் குறிப்பிடுக.
4) தனிப்பாடல் திரட்டு - நூல்குறிப்பு வரைக.
5) இரட்டுற மொழிதல் என்றால் என்ன ?

6) காய்ந்த தாவரத்தின் பகுதிகளுக்கு வழங்கும் சொற்கள் யாவை?
7) இளங்குமரனார் திருக்குறளுக்கு ஆற்றிய பணிகள் யாவை ?
8) பூவின் நிலைகளைக் குறிக்கும் சொற்களை எழுதுக.
9) தமிழின் சிறப்புகளாக அப்பாத்துரையார் கூறுவது யாது?
10) நாட்டு மக்களின் அறிவொழுக்கங்கள் எதன் அடிப்படையில் அமைந்திருக்கும் ?
11) தாவரத்தின் பிஞ்சு வகைகளுக்கு வழங்கும் சொற்கள் யாவை ?

12) உ..யிரளபெடையின் வகைகள் யாவை ?
13) ஒற்றளபெடை என்றால் என்ன ?
14) இசைநிறை அளபெடையை விளக்குக.
15) மூவகை மொழிகள் யாவை ?
16) சொல் என்றால் என்ன ? எ-கா தருக.
17) விகுதி பெற்ற தொழிற்பெயர் என்றால் என்ன ?
18) பொதுமொழி என்றால் என்ன ?
19) முதனிலைத் திரிந்த தொழிற்பெயராவது யாது ?
20) தொழிற்பெயருக்கும் வினையாலணையும் பெயர்க்கும் உள்ள வேறுபாடு யாது?

**சிறுவினா :**

1) செப்பரிய தமிழின் பெருமையை பெருஞ்சித்திரனார் வழிநின்று விளக்குக.
2) பாவலரேறு பெருஞ்சித்திரனார் - குறிப்பு வரைக.
3) இரட்டுற மொழிதலைச் சான்றுடன் விளக்குக.
4) கடல்கடந்து முதலில் அச்சேறிய மொழி எது ? அதன் சிறப்பினை விவரிக்க.
5) பாவாணர் தமிழ்ச்சொல்வளம் கட்டுரையில் இடம்பெற்றுள்ள சொல்வளங்களை விளக்குக.
6) தமிழ்நாட்டு நெல், கோதுமை வகைகளை விவரிக்க.
7) இரா.இளங்குமரனாரின் படைப்புகளைப் பட்டியலிடுக.
8) பூவின் பல்வேறு நிலைகளை விவரிக்க.
9) இளம் பயிர் வகைகளை விளக்குக.

**நெடுவினா:**

1) தமிழ்ச்சொல் வளம் கட்டுரையில், யார் இவர் பகுதியில் குறிப்பிட்டப்பட்டுள்ள தமிழ் அறிஞர் குறித்து விவரிக்க.
2) தமிழ் உரைநடையின் வளம் குறித்து எழில்முதல்வன் கூறுவனவற்றை விவரிக்க.

தயாரிப்பு : எஸ்.ஜெயசெல்வன், (Padasalai’s – Guru 2019 Awardee)
திரு.ஆ.மேனிலைப் பள்ளி,
திருவிடைமருதூர்
9443740120